[11th December 1959

தவறான ஒரு எண்ணம் உண்டாகி இருப்பதாக தெரிய வருகிறது. அங்கு முதல் மந்திரி அவர்கள் பேசிய காரணமாக இப்படிப்பட்ட ஒரு எண்ணம் நீண்ட நாட்களாகவே அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது என்பது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பேப்பரில் வந்தது என்ன, என்ன சொல்லுகிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் கவலை இல்லை. என்னவேண்டுமானாலும் பேப்பரில் எழுதலாம். ஆனால் எந்த விதத்திலாவது அதிருப்தி அடைந்திருக்கலாம். ஆனால் அந்த விஷயம் இப்பொழுது பரிசிலனையில் இருந்து வருகிறது. அதைப்பற்றி ஆலோசனை செய்து பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க ஏற்பாடு கூடிய சீக்கிரத்தில் செய்யப்படும்.

Conference of District Medical Officers

* 141 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a conference of District Medical Officers was held at Ootacamund in May 1959;

(*b*) if so, the subjects discussed;

(*c*) the decisions taken; and

(*d*) such of the decisions proposed to be implemented during the current Budget year?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes.

(*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

(*d*) Detailed proposals on the various recommendations are awaited by the Government.

SRI S. M. ANNAMALAI: மேஜையின் மீது வைக்கப்பட்ட அறிக்கைப்படி பாமிலி ப்ளானிங் க்ளினிக்கில் வேலை செய்யக் கூடிய நர்சுகள் சரிவர வேலை செய்யவில்லை என்று தெரிய வருகிறது. அவர்கள் திருப்திகரமாக வேலை செய்யவில்லை என்றும் தெரிய வருகிறது. அப்படி அங்கே வேலை செய்யக் கூடிய உத்யோகஸ்தர்கள் திருப்திகரமாக வேலை செய்யவில்லை யானால் ஏன் அந்தத் திட்டத்தைக் கைவிடக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: திருப்திகரமாக வேலை செய்யாமல் இருப்பதால்தான் அவர்கள் திருப்திகரமாக வேலை செய்ய சிபாரிசு செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

Small-scale Industries

* 142 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a proto-type-*cum*-training factory in Madras State for the development of super precision instruments in the small-scale sector:

---

[a] Printed as Appendix III on pages 548–553 infra.

11th December 1959]

(*b*) whether measuring and testing instruments, clock and watches are also included along with super precision instruments; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir. The Government of India are examining the tentative proposals submitted by the French Experts for the establishment of a Proto-type Production-*cum*-Training Centre for Instrument Industry in the Industrial Estate, Guindy, with the assistance of the French Government.

(*b*) & (*c*) The proposal is in its preliminary stage and it is likely to take some time for finalisation. The details of the proposal are awaited by this Government.

* 143 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பிரெஞ்சு சர்க்கார் உதவியுடன் கிண்டியில் சிறிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா? அப்படியானல் எப்போது?

(ஆ) என்னென்ன கைத்தொழில்கள்?

(இ) எவ்வளவு மூலதனம்?

(ஈ) இதில் பிரெஞ்சு சர்க்கார் அளிக்க முன் வந்திருக்கும் உதவி என்ன?

(உ) இதில் நம் மாநில சர்க்கார் மேற்கொள்ளும் பொறுப்பு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir. The Government of India are examining the tentative proposals of the French Experts for the establishment of a Proto-type Production-*cum*-Training Centre for Instrument Industry in the Industrial Estate, Guindy. The scheme is in its preliminary stage and is likely to take some more time for finalisation.

(*b*) *to* (*e*) The details of the proposal are awaited by this Government.

SRI A. VEDARATHNAM: ப்ரெஞ்சு இஞ்சினியர்களிடமிருந்து இது சம்பந்தமாக எஸ்டிமேட்டுகள் முதலியவைகள் பற்றிய முழு விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்து விட்டதா? அப்படி இருந்தால் அவைகள் என்ன என்பதை தயவு செய்து விவரிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தொழில் இலாகா டைரெக்டர் உள்பட ஒரு டெபுடேஷன் ஒன்று இப்பொழுது பிரான்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலைப் பற்றிய விவரம் அவர்களிடமிருந்து தெரிந்த பிறகு அந்தத் திட்டம் உருவாக்கப்படும்.